## சுருக்கம்

2020–2021–ம் ஆண்டிற்கான சட்டப்பேரவை அறிவிப்பு – கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.21.39 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல் – மீண்டும் இந்திய அளவிலான பத்திரிக்கைகளில் ஒப்பந்தப் புள்ளி குறித்த விளம்பரம் வெளியிட ரூ.6.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டதை வழங்க ஏதுவாக அரசாணையில் உரிய திருத்தம் மேற்கொள்ளுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஐ2)த் துறை

அரசாணை (நிலை) எண்.88 நாள்: 24.06.2021

தொழிலாளர் ஆணையர் அலுவலகம்
017180
30 JUN 2021
சென்னை–600 006

பிலவ வருடம், ஆனி–10
திருவள்ளுவர் ஆண்டு –2052

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.97, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 14.05.2020.
2. அரசாணை (நிலை) எண்.27, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 15.02.2021.
3. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரின் கடிதம் எண்.எல்2/2348/2021, நாள் 08.02.2021 மற்றும் 30.04.2021.

---------

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கட்டடம் மற்றும் இதர தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க மீண்டும் ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை இந்திய அளவிலான ஒரு ஆங்கில மற்றும் மாநில அளவிலான ஒரு தமிழ் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்ய செலவின தொகையான ரூ.6,50,000/–ஐ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்கள், இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை சென்னை, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திலிருந்து வழங்க ஏதுவாக அவ்வரசாணைக்கு உரிய திருத்தம் மேற்கொண்டு விளம்பர செலவினத்தொகையை அந்நிறுவனத்திற்கு வழங்க உத்தரவிடுமாறு அரசைக் கேட்டுகொண்டுள்ளார்.

(த.பி.பா.)

3. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமான பரிசீலினைக்குப்பின், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி 3–ல் ...பத்திரிக்கைகளில் "விளம்பரம் செய்ய" என்று இருப்பதற்கு பதிலாக பத்திரிக்கைகளில் "விளம்பரம் செய்த" என்று திருத்தம் மேற்கொள்ளலாம் என தீர்மானித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

இரா. கிர்லோஷ் குமார்
அரசு செயலாளர்

பெறுநர்:
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–600 0032.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.
மாநில கணக்காயர், சென்னை–600 018.
உரிய சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை.

நகல்:
நிதித் துறை, சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ.ந.மு.–2) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல். (கோ.எண்.8394/ஐ2/2021)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

24/6/2021
**பிரிவு அலுவலர்**